தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 74/2021 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திரு.இளங்கோவன் | | | |
| **Date** | **:** | **27.03.2026** | | | |
| **Time** | **:** | **11.38 a.m to 12.22 p.m** | | | |

தொ.த.சா.**1.**திரு.இளங்கோவன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

எனக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டு குறிப்பாணைகளின் அடிப்படையில் உள்துறை விசாரணை நடத்தப்பட்டது என்றால் ஆமாம். ஒரு குற்றச்சாட்டு குறிப்பாணையானது நான் வழக்கமாக விடுப்பில் இருப்பேன் என தெரிவித்து வழங்கப்பட்டது என்றால் ஆமாம். இரண்டாவது குற்றச்சாட்டு குறிப்பாணையானது நான் குடித்துவிட்டு விசாரணையில் கலந்து கொண்டேன் என சொல்லப்பட்டிருந்தது என்றால் ஆமாம். அந்த இரண்டு குற்றச்சாட்டு குறிப்பாணைகளின் அடிப்படையில் உள்துறை விசாரணை முறையாக நடைபெறவில்லை என நான் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் ஆமாம். எனக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து தான் நான் ஆட்சேபணை தெரிவிப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். மணிவண்ணன் என்பவர் கொடுத்த புகார் அடிப்படையில்

தான் முதல் குற்றச்சாட்டு குறிப்பாணை எனக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.1.** 07.12.2018 தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை எனக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.2.** 10.12.2018 தேதியிட்ட பதில் அதற்கு நான் கொடுத்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.3.** அந்த பதிலில் இனிவரும் காலத்தில் அது போன்று தவறாக நடந்து கொள்ள மாட்டேன் என உறுதிமொழி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். உள்துறை விசாரணையின் போது என்னுடைய வருகை பதிவேடு விவரம் குறியீடு செய்யப்பட்டது என்றாலும் அந்த விவரம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றாலும் சரியாக தெரியாது. 08.10.2018 முதல் 10.10.2018 வரை என் மனைவிக்கு குழந்தை பிறந்தது சம்பந்தமாக நான் விடுப்பு எடுத்து இருந்தேன் என்றால் ஆமாம். 25.10.2018 அன்று தற்காலிக விடுப்பு எடுத்து இருந்தேன் என்றால் ஆமாம். ஆனால் தகவல் தெரிவித்து விட்டு தான் எடுத்தேன். 11.12.2018 தேதியிட்ட விசாரணை அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.4**. விடுப்பு எடுக்க வேண்டிய முறை பற்றி எனக்கு தெரியும். 02.11.2016 அன்று திட்டமிடாத விடுப்பு எடுத்த காரணத்தினால் எனக்கு எச்சரிக்கை கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.5.** எனக்கு வருடத்திற்கு மொத்தம் 42 நாட்கள் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். அதைவிட கூடுதலாக நான் விடுப்பு எடுத்து உள்ளேன் என்றால் ஆமாம். 17.08.2017 தேதியிட்ட கடிதம் மூலம்

நான் தொடர்ந்து விடுப்பு எடுத்து இருந்த காரணத்தினால் பத்து நாட்கள் தற்காலிக பணிநீக்கம் செய்து உத்தரவு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**6**. விசாரணை நடவடிக்கை ஒத்தி வைக்கப்படுவதாக தெரிவித்து எனக்கு 04.01.2019 தேதியிட்ட கடிதம் வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**7**. நி.சா.ஆ.2 குற்றச்சாட்டு முன்னிலைக்கு உள்துறை விசாரணையானது 14.12.2018 முதல் 08.01.2019 வரை நடைபெற்றது என்றால் அதற்கான நடவடிக்கை குறிப்புகள் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**8** அந்த உள்துறை விசாரணையில் நான் கலந்து கொண்டேன் என்றால் ஆமாம். 17.12.2018 தேதியிட்ட விசாரணையில் பதில் கடிதத்தில் (நி.சா.ஆ.**3**) சொல்லி உள்ள விவரங்களை தான் சொல்லி இருந்தேன் என்றால் ஆமாம். 22.01.2019 அன்று விசாரணை முடிவறிக்கை வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**9**. 20.12.2018 அன்று நடைபெற்ற உள்துறை விசாரணைக்கு நான் மது அருந்திவிட்டு வந்ததாக சொல்லி எனக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**10**. அன்றைய தினம் நான் மது அருந்தி இருக்கவில்லை. 07.01.2019 தேதியிட்ட பதில் அதற்கு நான் கொடுத்திருந்தேன் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**11**. 22.01.2019 தேதியிட்ட விசாரணை அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**12**. இரண்டாவது குற்றச்சாட்டு குறிப்பாணையானது மார்க்கபந்து

என்பவர் எனக்கு எதிராக கொடுத்த புகார் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**13**. நான் மது அருந்தி இருக்கிறேனா இல்லையா என்று தெரிந்து கொள்வதற்காக அன்னை அருள் என்ற மருத்துவமனையில் பரிசோதிக்கப்பட்டேன் என்றால் ஆமாம். அதற்கான Test Report தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**14**. 20.12.2018 தேதியிட்ட குறிப்பில் நான் மது அருந்திவிட்டு வந்த காரணத்தினால் உள்துறை விசாரணை ஒத்திவைக்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த குறிப்பு நி.சா.ஆ.**15**. இரண்டாவது குற்றச்சாட்டு பொருத்து 24.01.2019 மற்றும் 31.01.2019 ஆகிய தேதிகளில் உள் துறை விசாரணை நடைபெற்றது என்றால் ஆமாம். அதற்கான விசாரணை நடவடிக்கை குறிப்புகள் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**16**. உள்துறை விசாரணையின் போது மார்க்கபந்து என்பவரை நான் குறுக்கு விசாரணை செய்வில்லை என்றால் சரியல்ல நான் அவரை கேள்விகள் கேட்டேன். விசாரணை நடவடிக்கை குறிப்புகளில் நான் கேட்ட கேள்விகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்றால் இல்லை. நான் கேட்ட குறுக்கு விசாரணை கேள்விகளை விசாரணை அதிகாரி பதிவு செய்யவில்லை என்று தெரிவித்து இருக்கிறேனா என்றால் இல்லை. மார்க்கபந்து என்பவரை குறுக்கு விசாரணை செய்ததாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரி

அல்ல. 02.02.2019 தேதியிட்ட முடிவறிக்கை வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.17. 26.02.2019 தேதியிட்டு இரண்டாவது காரணம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.18**. அதன் பிறகு எனக்கு 07.03.2019 தேதியிட்ட பணிநீக்க உத்தரவு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.1**9. 26.10.2016 தேதியிட்ட கடிதம் மூலம் இனிமேல் முறையாக வேலைக்கு வருவதாக தெரிவித்திருந்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.20**. நிர்வாகம் அது போன்று எழுதிக் கொடுக்க சொன்னதன் பேரில் எழுதிக் கொடுத்தேன். நிர்வாகம் சொன்னதன் பேரில் அந்த கடிதத்தை எழுதிக் கொடுத்ததாக என்னுடைய வழக்கிலோ சாட்சியத்திலோ சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லி உள்ளேன். ஆனால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை. 15.05.2017 தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை மற்றும் தற்காலிக பணி நீக்க உத்தரவு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.21.** அதே தேதியில் நான் கடந்த நான்கு மாதங்களாக வேலைக்கு வரவில்லை இனிவரும் காலங்களில் ஒழுங்காக வேலைக்கு வருவேன் என தெரிவித்து கடிதம் கொடுத்திருந்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.22.** 01.06.2017 தேதியிட்டு ஒரு கடிதம் கொடுத்து இருந்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.23.** 08.08.2017 குற்றச்சாட்டு குறிப்பாணை நான் முறையாக வேலைக்கு வரவில்லை என தெரிவித்து வழங்கப்பட்டது என்றால் ஆமாம்.

அது நி**.**சா**.**ஆ**.24** 14.08.2017 தேதியிட்டு பதில் கொடுத்து இருந்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.25.** அந்த பதிலை நான் தான் எழுதிக் கொடுத்தேன் என்றால் ஆமாம். நிர்வாகம் சொல்லி எழுதி கொடுத்தேன். 18.08.2017 தேதியிட்டு மீண்டும் ஒரு கடிதம் கொடுத்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.26.** 20.03.2018 அன்று மணிவண்ணன் என்பவர் எனக்கு எதிராக புகார் கொடுத்தார் என்றால் தெரியவில்லை. 20.03.2018 அன்று குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.27.** மணிவண்ணன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அன்றைய தினமே அதற்கான பதில் நான் கொடுத்து இருந்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.28.** 21.03.2018 அன்று மீண்டும் ஒரு கடிதம் கொடுத்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.29.** 09.05.2018 தேதியிட்டு ஏன் பணி நீக்கம் செய்ய கூடாது என கேட்டு இறுதி விளக்கம் கேட்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.30.** அதில் சில பிழைகள் இருந்த காரணத்தினால் 16.05.2018 தேதியிட்ட இரண்டாவது அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.31.** அதற்கு நான் பதில் கொடுத்து இருந்தேன் என்றால் ஆமாம். அது நி**.**சா**.**ஆ**.**32. என்னுடைய பதிலை பரிசீலித்து எனக்கு ஒரு வாய்ப்பு

கொடுக்கும் பொருட்டு 30 நாட்கள் தற்காலிக பணிநீக்கம் 20.06.2018 கடிதம் மூலம் செய்திருந்தார்கள் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**33.** நானே பல மன்னிப்பு கடிதங்களை தன்னிச்சையாக எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக நிர்வாகம் சொன்னதன் பேரில் அவ்வாறு எழுதிக் கொடுப்பதாக சொல்கிறேன் என்றால் இல்லை. நிர்வாக தரப்பில் எனக்கு பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்ட பின்னரும் நான் ஒழுங்காக வருகை பதிவு செய்யாத காரணத்தினால் பணிநீக்கம் செய்யப்பட்டேன் என்றால் எனக்கு லீவு பாக்கியிருந்தது ஆனால் நிர்வாகம் அதனை Approve செய்யவில்லை. நான் விடுப்பு எடுத்து விட்டு அதன் பிறகு தகவல் தெரிவித்த காரணத்தினால் நிர்வாகம் எனக்கு விடுப்பு Approve செய்யவில்லை என்றால் தவறு. நான் முன்னறிவிப்பு இன்றி விடுப்பு எடுப்பதை வாடிக்கையாக வைத்து இருந்த காரணத்தினால்தான் நிர்வாகம் எனக்கு எதிராக பணி நீக்க நடவடிக்கை எடுத்தது என்றால் தவறு. கடிதம் கொடுத்தால் குறைந்த தண்டனை வழங்குவதாக நிர்வாகம் சொன்னதால் அவ்வாறு கடிதம் எழுதிக் கொடுத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் தவறு. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.03.27 17:04:30 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:27.03.2026.